**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.163/2023**

**Prosecution witness : அ.சா. 4 Date : 14.09.2023**

| | |
|---|---|
| **Name : இந்திரா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 –4 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 ஐ தெரியும். இருதரப்பினருக்கும் இடையே நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக காலை 9 மணி சுமாருக்கு சத்தம் கேட்டுகொண்டிருந்தபோது, நான் சென்று பார்த்தபோது, அ.சா.1 ஐ எதிரிகள் அடித்ததாக கேள்விபட்டேன் வேறு ஒன்றும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தில் யார் யாருக்கு காயம்ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த பிறகு அதைப்பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C.163/2023**
**Prosecution witness : அ.சா. 5** **Date : 14.09.2023**

| Name : கண்ணன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 1 –4 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரியில் குடியிருந்து தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 ஐ தெரியும். இருதரப்பினருக்கும் இடையே நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. கடந்த ஓர் ஆண்டுக்கு முன்பாக காலை 9 மணி சுமாருக்கு எனது மகன் சொல்லி அ.சா.1 ஐ எதிரிகள் அடித்ததாக கேள்விபட்டேன் வேறு ஒன்றும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தில் யார் யாருக்கு காயம்ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த பிறகு அதைப்பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C.163/2023**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 14.09.2023**

| | |
|---|---|
| **Name : கோவிந்தன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 –4 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பள்ளிபட்யில் குடியிருந்து டவர் வேலை செய்து வருகிறேன். சம்பவம் குறித்து ஒன்றும் தெரியாது.என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 08.01.2022 ம் தேதி மதியம் 2.30 மணிக்கு நான் மற்றும் முருகன் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3) சம்பவ இடமான கண்ணன் தார்சு வீடு அருகே வரைந்த வரைபடத்திற்கு

சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**